# 2021-2022 விடியல் சொசைட்டி சத்தியமங்கலம்.

2 வது தளம், தங்கம் வளாகம், அத்தாணி சாலை,

வடக்குப்பேட்டை, சத்தியமங்கலம்(வ), ஈரோடு மாவட்டம் - 638 401.

மின்னஞ்சல்: vidiyalsociety.sathy@gmail.com


## *எங்களைப் பற்றி:*

நாங்கள் பொருளாதரத்தில் மிகவும் பின் தங்கியுள்ள பெண்கள், தலித் மற்றும் பழங்குடி மக்களுக்கு பணிகளை செய்து வருகிறோம். விளிம்பு நிலையில் உள்ள பெண்கள் மற்றும் குழந்தைகளின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்தும் நோக்கத்தில் தொடங்கப்பட்டது.

## *எங்கள் நோக்கம்:*

- அனைத்து பெண்களுக்கும் மனித உரிமைகள் மற்றும் மனித மாண்பு எந்தவித பாகுபாடும் இல்லாமல் கிடைக்க வேண்டும்.
- பொருளாதரத்தில் பின் தங்கியுள்ள மக்களை கிராம அளவில் பொருளாதாரத்தை உயர்த்த உதவி செய்தல் (சுய தொழில்)
- பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள பெண்குழந்தைகளின் கல்விக்கு உதவி செய்தல் மற்றும் பெண்களின் தலைமைத்துவம் பண்பை வளர்த்திக் கொள்ள அவர்களுக்கு பலவிதமான பயிற்சிகளை அமைத்து தருதல்.
- பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள மக்களை காப்பாற்றும் வகையில் உடல்ரீதியான மற்றும் மனரீதியான விழிப்புணர்வு கொடுத்தல்.
- பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள மக்களுக்கு அரசு சலுகைகளும் உரிமைகளும் கிடைக்கச் செய்தல்.

## பணி செய்து வரும் பகுதிகள்:

- கோபிச்செட்டிபாளையம்
- சத்தியமங்கலம்
- புளியம்பட்டி,
- பவானிசாகர்
- K.N.பாளையம்
- கடம்பூர்

மொத்த கிராமங்கள் : 60

மொத்த மக்கள்தொகை : 6500

## இதர பணிகள்:

- தேசிய உணவு பாதுகாப்பு சட்டம், சிறப்பு உட்கூறு திட்டம் மற்றும் அனைத்து அரசு சலுகைகளும் கிராம அளவில் உள்ள சமூக தலைவர்கள் மூலம் கிராம மக்களுக்கு கிடைக்கச் செய்தல்.
- தேசிய அளவில் கூட்டமைப்பு வலுப்படுத்தப்பட்ட மற்ற அமைப்புகளோடு நல்தோழமை உருவாக்கப்பட்டு அதன் மூலம் தேசிய அளவிலான பரப்புரையில் ஈடுபடுவது.
- செயல்பாடு மற்றும் வக்காலத்து கூட்டாளிகள்.
- NFSA மற்றும் SCP/STSP/WASH க்கான அணுகலை மேம்படுத்துதல் மற்றும் பணி செய்து வரும் பகுதிகளில் அந்தந்த கிராமத்தில் பெண் சமூகத் தலைவர்களை உருவாக்கி சமூகத் தலைவர்கள் மற்றும் களப்பணியாளர்கள் மூலமாக அரசு நலதிட்டங்களை பெற்றுத்தருவது

## கொரோனா விழிப்புணர்வு மற்றும் நிவாரண உதவி:



கொரோனா காலக்கட்டத்தில் கிராம பகுதிகள் மற்றும் சத்தி நகர பகுதிகளில் கொரோனா பற்றிய விழிப்புணர்வு மற்றும் நிவாரண உதவி விடியல் சொசைட்டி மக்கள் மாமன்றம் சார்பில் வழங்கப் பட்டது.

## பெண்களுக்கான விழிப்புணர்வு மற்றும் பயிற்சி:

விடியல் சொசைட்டி மக்கள் மாமன்றம் சார்பில் பெண்கள் மற்றும் வளரிளம் பெண்களுக்கு வாழ்க்கைத் திறன் மற்றும் தொழில் முனைவோருக்கான பயிற்சி வழங்கப்பட்டது.




## கல்வி மற்றும் விழிப்புணர்வு:

- பெண் குழந்தைகளுக்கான கல்வி உரிமை மற்றும் கல்வி ஊக்கத்தொகை பற்றிய விழிப்புணர்வு ஆதரவற்ற பெண் குழந்தைகளுக்கு சீருடை வழங்குதல்
- ஆதரவற்ற பெண்கள் மற்றும் முதியோருக்கான சமூக பாதுகாப்பு உரிமைகள், அரசின் சலுகைகளைப் பெறுவது பற்றிய பயிற்சி மற்றும் விழிப்புணர்வு விடியல் சொசைட்டி மக்கள் மாமன்றம் சார்பில் வழங்கப்பட்டது.



## முதியோர், ஆதரவற்றோர், மாற்றுத்திறனாளிகளுக்கான நலத்திட்டம்:



கிராம பஞ்சாயத்துகளில் முதியோர், மாற்றுத் திறனாளிகளுக்கான ஓய்வூதியம்.

ஆதரவற்ற விதவைப் பெண்கள், கணவனால் கைவிடப்பட்டோருக்கு ஓய்வூதியம் மற்றும் சிறு தொழில் முனைவதற்கான உதவி, அரசு நலத்திட்டங்களில் உரிமை பெறுவதற்கான பயிற்சி விடியல் சொசைட்டி மக்கள் மாமன்றம் சார்பில் வழங்கப்படுகிறது.

## வெள்ள நிவாரண உதவி:



- வெள்ளத்தால் பாதிப்படைந்த மலை அடிவார பழங்குடி மக்களுக்கு உணவு, நிவாரணப் பொருட்கள்,
- பள்ளிக் குழந்தைகளுக்கு வெள்ளத்தால் பாதிப்படைந்த பகுதிகளைத் தாண்டிச் செல்ல போக்குவரத்து உதவி,
- வெள்ளநீர் நிரம்பிய பள்ளமான பகுதிகளுக்கு மண் நிரப்பி சமன்செய்ய அந்த பகுதி சமூகத் தலைவர்கள் அரசுடன் இணைந்து மீட்பு பணிகளில் உதவினர்.

## கிராம அளவில் கொடுக்கப்பட்ட பயிற்சிகள்:

- கிராமசபா கூட்டம் பற்றிய பயிற்சி 50 கிராமங்களில் கொடுக்கப் பட்டது.
- கொத்தடிமை ஒழிப்புச் சட்டம் பற்றிய பயிற்சி,

- SC/ST, பெண்குழந்தைகளுக்கான கல்வி உதவித்தொகை பற்றிய விழிப்புணர்வு பயிற்சி
- தகவல் அறியும் உரிமை சட்டம், கல்வி உரிமைச் சட்டம், வன உரிமைச் சட்டம் 2006 பற்றிய பயிற்சி,
- SC/ST, வன்கொடுமை தடுப்புச் சட்டம் பற்றிய பயிற்சி மற்றும் விழிப்புணர்வு,
- தலைமைத்துவம் பற்றிய பயிற்சி கிராம தலைவர்களுக்கு கொடுக்கப் பட்டது.
- அரசு நலத்திட்டம் மற்றும் சமூக நலத்திட்டம் பற்றிய பயிற்சி,
- தேசிய ஊரக வேலைவாய்ப்பு பற்றிய விழிப்புணர்வு பயிற்சி,
- பள்ளிச் சேர்க்கை பிரச்சாரம் அனைத்து கிராமங்களிலும் செய்யப்பட்டது.

Supporting By,

LOK MANCH

FREEDOM RISING

ENSURING SOCIAL PROTECTION

**Thank you.!**